## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – 2022-2023 – திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக அறிவுசார் குறையுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான எட்டு இல்லங்கள் அமைக்க நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1 . 2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 21

நாள்: 15.07.2022
சுபகிருது, ஆனி – 30
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு நாள் 21.04.2022.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 3670/ம.இ.நிர்.2/2022, நாள் 22.04.2022.

-----

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது இன்ன பிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

"அறிவுசார் குறையுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 8 இல்லங்கள் திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் ரூ.91.72 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 98 இல்லங்களும் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான 65 இல்லங்களும் செயல்பட்டு வரும் நிலையில், தற்போது கூடுதல் பயனாளிகளின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய எட்டு மாவட்டங்களில் புதிதாக தொடங்க வேண்டியுள்ளது என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான ஒரு இல்லத்திற்கு ரூ.13,94,800/- என மூன்று இல்லத்திற்கு ரூ.41,84,400/-மும், மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு இல்லத்திற்கு ரூ.12,50,800/- என ஐந்து இல்லத்திற்கு ரூ.62,54,000/-மும், சேர்த்து ரூ.1,04,38,400/- நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதாகவும் தெரிவித்து, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான எட்டு இல்லங்களை 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(தா.பி.பா.)

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய எட்டு மாவட்டங்களில் தகுதி வாய்ந்த தன்னார்வ நிறுவனங்களை கண்டறிந்து அவற்றின் விண்ணப்பங்களைப் பெற்று, உரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களை, வெளிப்படைத் தன்மையுடன் தேர்வு செய்து அந்நிறுவனங்கள் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மற்றும் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான புதிதான இல்லங்களை அமைக்க அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது. இதற்கான செலவினங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் மற்றும் இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒப்பளிப்பு செய்யப்படும். மேலும், இணைப்பு-1 மற்றும் இணைப்பு-2ல் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வில்லங்களுக்கான ஆண்டு செலவினத்தை ரூ.1,04,38,400/-க்கு மிகாமல் அமைப்பதற்கு (ரூபாய் ஒரு கோடியே நான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நானூறு மட்டும்) நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 3 இல்லங்கள்</u>

| | |
|---|---|
| "2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும்-02 - சமூக நலன் - 101 - மாற்றுத் திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் MO - மனநோயால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான நிதியுதவி - 309 - உதவித் தொகை-03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"<br>"(IFHRMS: த.தொ.கு. 2235-02-101-MO-30903)" | ரூ.41,84,400/- |

<u>மனவளர்ச்சி குன்றியோருக்கான 5 இல்லங்கள்</u>

| | |
|---|---|
| "2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும்-02 - சமூக நலன் - 101 - மாற்றுத் திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் DL - மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய பராமரிப்பு இல்லங்கள்-309 - உதவித் தொகை-01 - நடப்பு செலவுக்கான உதவித் தொகை"<br>"(IFHRMS: த.தொ.கு. 2235-02-101-DL-30901)" | ரூ.62,54,000/- |
| மொத்தம் | ரூ.1,04,38,400/- |

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.34146/நிதி(சந)/2022, நாள் 13.07.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் தறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதி (ச.ந)த் துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/07/2022
15/7/22

**அரசாணை (நிலை) எண். 21, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1(2))த் துறை, நாள் 15.07.2022-ன் இணைப்பு-1**

**மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மூன்று இல்லத்திற்கான 2022-2023ஆம் ஆண்டு செலவின விவரங்கள்**

| வ.எண் | இனங்கள் | தேவைப்படும் மாதங்கள் மற்றும் தொகை விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சமூக பணியாளர்கள் | Rs. 8000 /- x 1 x 12 மாதங்கள் | 96,000 |
| 2 | துணை மருத்துவ செவிலியர் | Rs. 5500 /- x 1 x 12 மாதங்கள் | 66,000 |
| 3 | விடுதி காப்பாளர் | Rs. 4000 /- x 1 x 12 மாதங்கள் | 48,000 |
| 4 | சமையலர் | Rs. 3000 /- x 1 x 12 மாதங்கள் | 36,000 |
| 5 | தொழிற் பயிற்சியாளர் | Rs. 4000 /- x 1 x 12 மாதங்கள் | 48,000 |
| 6 | உணவூட்டு செலவினம் | Rs. 1200 /- x 50 x 12 மாதங்கள் | 7,20,000 |
| 7 | இணை உடைகள் (2 இணை) | Rs. 500 /- x 50 x (வருடத்திற்கு 2 செட்) | 50,000 |
| 8 | மருந்துகள் | Rs. 250 /- x 50 x 12 மாதங்கள் | 1,50,000 |
| 9 | பாய் | Rs. 150 /- x 50 | 7,500 |
| 10 | தலையணை | Rs. 50 /- x 50 | 2,500 |
| 11 | சோப்பு, எண்ணெய் மற்றும் இதர செலவுகள் | Rs. 50 /- x 50 x 12 மாதங்கள் | 30,000 |
| 12 | சமையல் எரிவாயு | Rs. 900 /- x 12 மாதங்கள் | 10,800 |
| 13 | வாடகை மற்றும் மின்சாரம் | Rs. 10000 /- x 12 மாதங்கள் | 1,20,000 |
| 14 | படுக்கை விரிப்பு | Rs. 200 /- x 50 | 10,000 |
| | | மொத்தம் ரூ. | 13,94,800 |

ரூ.13,94,800 X 3 இல்லங்கள் = ரூ.41,84,400/-

(நாற்பத்தொரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நானூறு மட்டும்)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
15/07/2022
15/7/22

அரசாணை (நிலை) எண்.21, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1(2))த் துறை,

நாள் 15.07.2022-ன் இணைப்பு-2

மனவளர்ச்சி குன்றியோருக்கான ஐந்து இல்லத்திற்கான 2022-2023ஆம் ஆண்டு செலவின விவரம்

| வ. எண் | இனங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர்/ விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம் ரூ. 6,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 72,000/- |
| 2. | காப்பாளர், ரூ. 5,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 60,000/- |
| 3. | சமையலர், ரூ. 3,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 36,000/- |
| 4. | உதவி சமையலர் ரூ. 2,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 24,000/- |
| 5. | இரவுக் காவலர் ரூ. 4,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 48,000/- |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள் ரூ. 6,000/- x 12 நபர் x 12 மாதங்கள் | 1,44,000/- |
| 7. | துப்புரவு பணியாளர் ரூ. 2,000/- x 1 நபர் x 12 மாதங்கள் | 24,000/- |
| 8. | உணவூட்டு செலவினம் ரூ. 1,200/- ஒரு மாதத்திற்கு x 40 நபர் x 12 மாதங்கள் | 5,76,000/- |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்) ரூ. 500/- x 40 நபர் x 2 செட் | 40,000/- |
| 10. | வாடகை கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டடம் எனில்) மற்றும் மின் கட்டணம் x 12 மாதங்கள் | 1,56,000/- |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம் ரூ. 1,000/- x 12 மாதங்கள் | 12,000/- |
| 12. | மருந்துகள், ரூ. 1,500/- x 12 மாதங்கள் | 18,000/- |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள் ரூ. 200/- x 40 நபர்கள் | 8,000/- |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள் ரூ. 50/- x 40 நபர்கள் | 2,000/- |
| 15. | சமையல் எரிவாயு ரூ. 900 /- x 12 மாதங்கள் | 10,800/- |
| 16. | தோட்டக் கலை / மெழுகுவர்த்தி / பேக்கரிபயிற்சி | 20,000/- |
| | மொத்தம் | 12,50,800/- |

ரூ.12,50,800 X 5 இல்லங்கள் = ரூ.62,54,000/-

(ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

15/7/22

15/07/2022